Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 160

சனிக்கிழமை
04 மே 2024

சித்திரை 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## முச்சந்தி முரளி



"உவர் மைத்திரியார் எல்லாத்திலையும் முந்திரிக்கொட்டை மாதிரி முந்திக்கொண்டு முடிவெடுத்து முட்டுச்சந்தியில மாட்டுப்படப்போறார் பாருங்கோ"

## 44 இலங்கையருக்கு பொதுமன்னிப்பு!

கொழும்பு, மே 4
ஐக்கிய அரபு இராச்சியத்தில் சிறைவாசம் அனுபவித்து வந்த 44 இலங்கையர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. ☞ 11

## இருவர் கைது

வவுனியா, மே 4
வவுனியாவில் மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் இரு சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ☞ 11



# படுமோசமான ஆட்சியே தற்போது இலங்கையில்

## நோர்வேத் தூதரிடம் சஜித் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மே 4**
**இலங்கையில் தற்போது படுமோசமான ஆட்சியே முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவரான சஜித், நோர்வேத் தூதுவரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.** ☞ 11

## இறுதிப்போர் தொடர்பாக பொன்சேகா புதுப்புத்தகம்

கொழும்பு, மே 4
இலங்கையில் நடைபெற்ற போர் தொடர்பில் இறுதிக்கட்ட சமரை வழிநடத்திய முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா புத்தகமொன்றை எழுதிவருகின்றார் எனத் தெரியவருகின்றது. ☞ 11



ஜனாதிபதித் தேர்தல்

## களமிறங்குவதை தீர்மானிக்கவில்லை

### விஜயதாஸ அறிவிப்பு

கொழும்பு, மே 4
சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தனது பெயரை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்தாலும் தேர்தலில் களமிறங்குவது தொடர்பில் தான் இன்னும் முடிவெடுக்கவில்லை என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இந்தத் தகவலை அவர் தெரிவித்துள்ளார். விஜயதாஸ ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது:-
'ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் சுதந்திரக் கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை. மைத்திரிபால சிறிசேனவின் பரிந்துரை அவரது தனிப்பட்ட கருத்தாக இருக்கலாம். ☞ 11

## பணிப்புறக்கணிப்பில் ஈடுபட கிராம அலுவலர்கள் முடிவு

நாடளாவிய ரீதியில் திங்கட்கிழமை முதல் இரண்டு நாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக கிராம அலுவலர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளதாக கிராம அலுவலர்கள் சங்கத்தினர் கொழும்பில் நேற்று நடத்திய மாநாட்டில் வைத்துத் தெரிவித்துள்ளனர். (அ-ம-6)



## பல்கலை. மாணவர்களின் போராட்டத்தில் நீர்த்தாரை

### கொழும்பில் பதற்றநிலை

கொழும்பு, மே 4
கொழும்பு ஸ்ரீ விகாரமஹாதேவி பூங்காவுக்கு அருகில் பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகத்தை மேற்கொண்டதையடுத்து, அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. ☞ 11

## ராஜபக்சக்களுக்கு எதிர்காலமில்லை!

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, மே 4
பொருளாதார படுகொலையாளிகள் என்று உயர்நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ள ராஜபக்சக்களுக்கும், பெரமுனவுக்கும் அரசியல் எதிர்காலம் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினரான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ☞ 11

## தவறான முடிவெடுத்து கடற்படைச் சிப்பாய் சாவு!

கிளிநொச்சி, மே 4
முழங்காவில் கடற்படை முகாமில் பணியாற்றிய கடற்படைச் சிப்பாய் ஒருவர் தவறான முடிவெடுத்து நேற்று உயிரிழந்துள்ளார்.
பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை, தனது துப்பாக்கியால்தன்னைத் தானே சுட்டு அவர் உயிரை மாய்த்துள்ளார் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது.
முழங்காவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

## சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் விடுதலை!

யாழ்ப்பாணம், மே 4
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த மூன்று இந்திய மீனவர்கள் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தினால் நேற்று வெள்ளிக்கிழமை ☞ 11

## ஜே.வி.பி.யுடன் இணைவதற்கு டலஸ், சரித ஹேரத் பேச்சு?

### கொழும்பு அரசியலில் பரபரப்பு

கொழும்பு, மே 4
ஜே.வி.பி.யின் தேசிய மக்கள் சக்தியுடன் இணைவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும மற்றும் சரித ஹேரத் ஆகியோர் பேச்சு ☞ 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதினப் பேரணிகளுக்காக தண்ணீராகக் கரைந்த பணம்?

கொழும்பு, மே 4

மேதினத்தன்று பிரதான அரசியல் கட்சிகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுத்த மேதினக் கூட்டங்கள் மற்றும் பேரணிகளுக்காக சுமார் 200 கோடி ரூபா வரையில் செலவழிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு ஊடக மொன்று தெரிவித்துள்ளது.

பணவீக்கச் சூழலிலும் வரலாற்றில் அதிகப்படியான பணம் செலவு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட மேதின நிகழ்வுகளாக இவை அமைந்துள்ளன எனத் தெரிவிக் கப்படுகிறது.

மேதினப் பேரணிக்கு மக்களை அழைத்து வருவதற்குப் போக்குவரத்துச் செலவுகளுக்காக இம்முறை அரசியல் கட்சிகளால் அதிக பணம் செலவிடப்பட்டுள்ளது.

மீதிப் பணம் மேடை அமைப்பது, ஒலிபெருக்கி, விளக்குகள் அமைத்தல், கூட்டங்களைச் சுற்றியுள்ள பகுதிகளை அலங்கரித்தல், கட்சிக் காரர்களுக்கு உணவு, பானங்கள் வழங்குதல் போன்றவற்றுக்குச் செலவிடப்பட்டுள்ளது.

மேலும் மேதினப் பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்ததற்காக பல அரசியல் கட்சிகள் நிதிகளைப் பொறுப்பேற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சூழ்ச்சிகளை விடுத்து நாட்டைக் காப்பாற்றுக

## சம்பிக்க வேண்டுகோள்



கொழும்பு, மே 4

அரசியல் சூழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதை தவிர்த்துவிட்டு எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் வெளிநாட்டுக் கடன்களை அரசாங்கம் மறுசீரமைக்க வேண்டும். இல்லாவிடின் நாடு மீளவும் நெருக்கடிக்குள் தள்ளப்படும் வாய்ப்பு உண்டாகும் - இவ்வாறு ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

அரசமுறை கடன் மறுசீரமைப்பு தொடர்ந்து இழுபறி நிலையில் உள்ளது. எதிர்வரும் ஜூலை மாதத்துக்கு முன்னர் வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைக்கா விட்டால் நெருக்கடிகளை எதிர்கொள்ளநேரிடும்.

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தாமதமானால் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகிய நிதி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் அபிவிருத்தியில்லா நிவாரண ஒத்துழைப்புகள் முடங்கும். இந்த நிலை ஏற்பட்டால் சுமார் 800 மில்லியன் டொலரை இலங்கை இழக்க நேரிடும்.

ஆகவே அனைவரும் அரசியல் சூழ்ச்சிகள்- கவிழ்ப்புகளைக் கைவிட்டு நாட்டை முன்னேற்றும் பாதைக்கு இட்டுச்செல்லவேண்டும் - என்றார். (ச-இ)

# காங்கேசன் –நாகபட்டினம் கப்பல் பயண விவரங்கள்

யாழ்ப்பாணம்,மே 4

எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள காங்கேசன்துறைக்கும் இந்தியாவின் நாகபட்டினத்துக்கும் இடையிலான கப்பல் சேவையின் பயண விவரங்களை கப்பல் சேவை நிறுவனத்தின் உரிமையாளர் நிறஞ்சன் நந்தகோபன் அறிவித்துள்ளார்.

யாழ் .ஊடக அமையத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அதற்கமைய எதிர்வரும் 13 ஆம் திகதி நாகபட்டினத்திலிருந்து காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் கப்பல் சேவை நண்பகல் 12 மணிக்கு காங்கேசன்துறையை வந்தடையும். பின்னர் பிற்பகல் 2 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து ஆரம்பமாகி மாலை 6 மணிக்கு நாகபட்டினத்தைச் சென்றடையும்.

**கட்டணம்**

கப்பல் சேவையின் ஒருவழிக் கட்டணமாக 15 ஆயிரம் ரூபா (50 டொலர்) அறவிடப்படும். அத்துடன் பயணி ஒருவரிடமிருந்து இலங்கை அரசால் புறப்பாட்டு வரிக் கட்டணமாக ஆயிரத்து 500 ரூபா (5 டொலர்) அறவிடப்படும். நாகபட்டினம் முதல் இலங்கைக்கு இந்திய அரசாங்கத்தின் ஜி.எஸ்.டி.யாக இலங்கை மதிப்பில் 2700 ரூபாவை (9 டொலர்) இந்தியா அரசாங்கம் அறவிடும்.

**பொதிகளின் அளவு**

ஒவ்வொரு பயணிகளுக்கும் 60 கிலோகிராம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்திய சுங்க சட்டத்தின்படி அதற்கு மேலாகக் கொண்டுவரப்படும் போது வர்த்தக பண்டம் என வரி அறவிடப்படும்.

**விசா**

இந்தியாவிலிருந்து வருபவர்களுக்கு வருகையின்போது விசா வழங்கப்படும். இலங்கை பிரஜைக்கு விசா இல்லை. யாழ்- இந்தியத் துணைத் தூதரகத்திடம் காலையில் விண்ணப்பித்தால் மாலையில் விசா கிடைக்கப்பெறும்.

**பயணசீட்டுக்கள்**

இலங்கையிலிருந்து செல்பவர்களுக்கு metro voyage நிறுவனம் இதற்கான பயணசீட்டுகளை விநியோகிக்கும். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கொழும்பு என கிளை நிறுவனங்கள் உள்ளன. மேலதிக தொடர்புகளுக்கு 0212224647 தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்கலாம் என்றும் குறித்த நிறுவனத்தின் பிரதிநிதி தெரிவித்தார். (ச-125)

# எரிவாயு விலை மீண்டும் குறையும்

கொழும்பு, மே 4

நாட்டில் நேற்று நள்ளிரவு முதல் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த மாதமும் சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்படுவதற்குரிய சாத்தியம் உள்ளது என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

சமையல் எரிவாயுவின் புதிய விலைப் பட்டியலை அறிவிக்கும் ஊடக சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது. இதன்போது அவர் கூறியவை வருமாறு:-

12.5 கிலோ எடையுடைய சமையல் எரிவாயுவின் விலை 175 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 3 ஆயிரத்து 940 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உலக சந்தை உள்ளிட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டே இந்த விலை குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்திலும் சமையல் எரிவாயு விலை குறைவடையக்கூடிய சாத்தியம் இருக்கின்றது - என்றார். (ஓ-44)

# மருந்துகளுக்கு தட்டுப்பாடு



கொழும்பு,மே 4

நாட்டின் அரசாங்க மருத்துவமனைகளில் மருந்துப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது என்று அரசாங்க மருந்தாளர் சங்கத்தின் தலைவர் துசார ரணதேவ தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்கு நிலவி வரும் தட்டுப்பாடு காரணமாக நாடுமுழுவதிலும் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற முறைகேடுகளால் இவ்வாறு மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# ஐ.தே.க. மீண்டும் பலமாகிவிட்டது

## பாலித ரங்கே பண்டார பெருமிதம்

கொழும்பு, மே 4

ஐக்கிய தேசியக் கட்சி எழுந்துவிட்டது, அக்கட்சியின் பலம் என்னவென்பது அடுத்த தேர்தலில் தெரியவரும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவுள்ளனர். மேதினத்தில் அவர்கள் மேடையேறுவார்கள் என நாம் கூறவில்லை. அடுத்துவரும் நாள்களில்தான் அவர்கள் வருவார்கள். இனித்தான் அரசியல் ஆட்டம் சூடுபிடிக்கும்.

விழுந்துவிட்டது எனக் கூறப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி எழுந்துவிட்டது. எமது பலம் என்னவென்பது அடுத்துவரும் நாள்களிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் தெரியவரும். சஜித் பிரேமதாஸ ஜனாதிபதித் தேர்தலுக்கு வருவார் என நம்பவில்லை. ஐ.தே.க.வில் தலைமைத்துவப் பிரச்சினை ஏற்பட்டபோதுகூட கருஜயசூரியவை பலிகடாவாக்கிவிட்டு அவர் தப்பித்தார் - என்றார். (ஓ-44)

# ரணிலின் அழைப்பை சஜித் அணி நிராகரிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை ஏற்கப்போவதில்லை. அவருடன் இணைந்து செயற்படுவதற்கு நாம் தயாரில்லை என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணயநிதியத்துடனான ஒப்பந்தத்தை வெற்றியடையச் செய்து நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்க அரசுடன் உடன்படிக்கை செய்துகொள்ள முன்வருமாறு ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. உள்ளிட்ட அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இதுதொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சஜிவ சேனசிங்க கூறியவை வருமாறு:-

ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட நாம் தயாரில்லை. எமது கட்சியை அவர் அழித்தார். புதிய தலைவர்களைஉருவாக்க இடமளிக்கவில்லை. இதனால் எமது கட்சி உறுப்பினர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ரணிலுடன் எமக்கு எவ்வித கொடுக்கல் வாங்கலும் இல்லை. பலமான அரசியல் கூட்டணியாகத் தேர்தலை எதிர்கொண்டு வெற்றி பெறுவோம் -என்றார். (அ-ஓ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சை மிளகாய் விலையில் வீழ்ச்சி



## செய்கையாளர்கள் பாதிப்பு

**கிளிநொச்சி, மே 4**

**பச்சை மிளகாய் விலையில் தற்போது பெருவீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் செய்கையாளர்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.**

அரசாங்கத்தின் நவீன விவசாய விரிவாக்கல் திட்டத்தின்கீழ் கண்டாவளைப் பிரதேசத்தில் 300க்கு மேற்பட்டோர் மிளகாய் செய்கையில் ஈடுட்டனர்.

தற்போது அவற்றின் விலையில் சரிவு ஏற்பட்டதையடுத்து பச்சை மிளகாய் 60தொடக்கம் 70 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்படுகிறது.

இதனால் தமது உற்பத்திச் செலவையே ஈடுசெய்யமுடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். எனவே உரிய அதிகாரிகள் தமது உற்பத்திக்கு நியாய விலையை வழங்கவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-113)

# ஒட்டகப்பிலவு ஞானவைரவர் ஆலயம்-விடுவிப்பு



யாழ்ப்பாணம், மே 4

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பலாலி வடகிழக்கு ஒட்டகப்பிலவு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் பூசை வழிபாடுகள் முன்னர் விடுவிக்கப்பட்ட பகுதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட இடத்தில் நடைபெற்று வந்தன. இந்நிலையில் ஆலயத்தை முழுமையாக விடுவிக்குமாறு ஆலய நிர்வாகத்தினர் பலமுறை கோரிக்கை விடுத்துவந்தனர். இதற்கமைய பாதுகாப்புத் தரப்பினரால் தற்போது ஆலயம் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளது. (ஒ-66)

# இந்தியாவுக்குத் தொடர்பில்லை

கொழும்பு, மே 4

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விசா வழங்கும் நடைமுறையை இந்திய நிறுவனங்கள் பொறுப்பேற்றுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி உண்மைக்குப் புறம்பானது என கொழும்புக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

குறிப்பிடப்பட்டிருக்கும் நிறுவனங்கள் இந்தியாவை தளமாகக்கொண்டு இயங்கும் நிறுவனங்களோ அல்லது இந்திய நிறுவனங்களோ அல்ல. இந்த விடயத்தோடு இந்தியாவை தொடர்புபடுத்துவது அடிப்படை ஆதாரமற்றதாகும் என இந்தியத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (ஒ-இ)

# மகப்பேற்று மருத்துவர் சிறீதரனுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடமையாற்றிய மகப்பேற்று மருத்துவ நிபுணர் ஏ.சிறீதரன் நேற்று முதல் நடைமுறையாகும் வகையில் கொழும்பு டீ சொய்சா பெண்கள் மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக மகப்பேற்று மருத்துவ நிபுணர் ஜே.கஜேந்திரன் யாழ். போதனா மருத்துவமனையில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

இதுவரை மகப்பேற்று மருத்துவ நிபுணர் ஏ.சிறீதரனின் பொறுப்பிலிருந்த விடுதியையும் அவருடைய கிளினிக் நோயாளர்களையும் மகப்பேற்று மருத்துவ நிபுணர் எஸ்.சிறீசரவணபவா பொறுப்பேற்கவுள்ளார் என மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அதேவேளை இதுவரை மகப்பேற்று மருத்துவ நிபுணர் எஸ்.சிறீசரவணபவா பொறுப்பில் இருந்த விடுதியையும் அவருடைய கிளினிக் நோயாளர்களையும் மகப்பேற்று மருத்துவ நிபுணர் ஜே.கஜேந்திரன் பொறுப்பேற்கவுள்ளார்.

மருத்துவ நிபுணர் சிறீதரன் கடந்த 18 வருடங்கள் யாழ். போதனா மருத்துவமனையில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-26,100,66)

# லாஃப் எரிவாயு விலை குறைப்பு

கொழும்பு,மே 4

லாஃப் சமையல் எரிவாயு விலையும் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 275 ரூபாவாலும், 5 கிலோ எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 110 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சுற்றுலாவிகளைக் கவரும் வகையில் கோட்டையை மாற்றியமைக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாண நகரின் முக்கியமான சுற்றுலாத்தலமாகக் காணப்படும் கோட்டையை, சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கு ஏற்றால்போல மாற்றியமைப்பதற்கான புதிய திட்டங்களை வகுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தின்போதே ஆளுநர் இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

யாழ்ப்பாணக் கோட்டையின் உட்புறம் மற்றும் வெளிப்புறச் சூழலை, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் அழகுபடுத்தத் தேவையான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறும் ஆளுநர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தொல்பொருள் திணைக்களம் ஆகியன இணைந்து புதிய திட்டங்களை வடிவமைக்குமாறும், அதற்கான அனுமதியை மத்திய அமைச்சு மற்றும் துறைசார் திணைக்களங்களிடம் பெற்று அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தினார். வரலாற்றுச் சின்னமாகக் காணப்படும் கோட்டையைப் பாதுகாப்பதற்கும், அதனூடாக வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் ஏற்றவகையில் புதிய திட்டங்கள் வடிவமைக்கப்படவேண்டும் என ஆளுநர் தெரிவித்தார். (ஒ-26,27)



# தினம் தெரியுமோ?

எலக்சன் வரும் பின்னே, அரிசி வரும் முன்னே எண்டமாதிரி, ரணிலார் அரிசியைக் குடுத்து சனத்துக்கு ஐஸ்பண்ண வெளிக்கிட்டவர். வாக்குக்குக்காக இறைச்ச அரிசி இஞ்சாலிப் பக்கமும் சுவறி இருக்கு. வடக்கில தனக்கு வாக்கு விழாது எண்டு தெரிஞ்சாலும், எதுக்கும் தூண்டிலைப்போட்டு வைப்பம் எண்டு ரணில் குடுத்த அரிசியை வைச்சு சனங்களின்ர வீட்டில உலை எரிஞ்சுதோ இல்லையோ, சில மில் முதலாளிமார் நல்லா பேய்க்காட்டிப் போட்டினம் எண்டு பரவலாக் கதை. 10 கிலோ உரப்பையிலதான் இந்த அரிசியள் குடுபட்டது. ஒவ்வொரு பிரதேச செயலகமும், கச்சேரிக்காரரும் பெருந்தொகையா, அரசாங்கம் சொன்ன ரேட்டில தரக்கூடியவையிட்டதான் இந்த அரிசியை வாங்கினவை. "எப்பவடா இப்பிடியொரு சந்தர்ப்பம் வரும்?" எண்டு காத்திருந்த மாதிரி மில்காரரும் இந்த அரிசி விநியோகத்தை வைச்சு, தங்களிட்ட இருந்த செல்லும் செல்லா இருப்பையெல்லாம் சனத்தின்ர தலையில கட்டிப்போட்டினமாம். வழக்கமான அரிசியை விடவும், இந்தமுறை ரணில் குடுத்த குத்தரிசி கடுஞ் சிவப்பு நிறமாம். "உந்தச் சிவப்பு அரிசியை என்னெண்டு சமைக்கிறது? மில்லில கொண்டுபோய் தீட்டினால் கலர் மாறும்" எண்டு மில்லுக்குப் போனால், "உதெல்லாம் தீட்ட ஏலாது. அப்பிடித் தீட்டினால் குறுணியாத்தான் வரும் எண்டு" சொல்லியிருக்கினம். அதால சனம் அந்த ரத்தம் மாதிரிச் சிவத்த அரிசியை வேற வழியில்லாமல் சமைச்சிருக்கினம். வாயிலயே வைக்க முடியாதளவுக்கு சோத்தின்ர ரேஸ்ட் இருந்திருக்கு. அதால கனசனம் அரிசியை வாங்கிறதா, விடுறதா எண்டெல்லாம்கூட யோசிச்சிருக்கினம்.

எப்பவும் தவிச்ச முயல் அடிச்சுப் பழகின எங்கட சில விதானைமார், கூடாத அரிசிக்குப் பதிலா நல்ல அரிசியை மாத்திக் குடுக்க நடவடிக்கை எடுக்காமல், வேற இரு வேலை செய்திருக்கினம். அரிசி குடுபடேக்கையே "அரசாங்க அரிசி எப்பிடி இருக்குமெண்டு தெரியும் தானே? சமைக்கச் சரிவராது. விக்க விரும்பினவை அங்கால நிக்கிறவரிட்ட விக்கலாம்" எண்டு விளம்பரம் செய்திருக்கினம். அரிசி குடுக்கிற இடத்தில இருந்து கொஞ்சம் தள்ளி, சின்ன வாகனத்தோட ரண்டு மூண்டுபேர் நிண்டு, அரிசியைக் கொண்டு போறவையிட்ட "விக்கிறதெண்டால் தாங்கோ" எண்டு கேட்டும் வாங்கியிருக்கினம். அப்பிடி வாகனத்தோட நிண்டவை விதானைமாரின்ர ஆக்கள் தானாம். சனத்திட்ட கொஞ்சக்காசுக்கு வாங்கி அப்பிடியே கடையளுக்கு கொமிஷனோட குடுக்கினமாம். முந்திச் சண்டை நடக்கேக்கையும் நிவாரணச் சாமானை இப்பிடி சனத்திட்ட வாங்கி, விக்கிறதும், இல்லாத ஆக்களுக்கெல்லாம் நிவாரணமுத்திரை, குடும்பக் கார்ட் எல்லாம் குடுத்து கோடீஸ்வரரான விதானைமார் வாழ்ந்த மண் இது. ஆனால் இப்பத்தை விதானைமாருக்கு அப்பிடியான சந்தர்ப்பங்கள் இல்லை. இப்ப ஏதோ அரிசியிலதான் கொஞ்சம் லாபம் பார்த்திருக்கினம்போல. ஆனாலும் எல்லா விதானைமாரும் அப்பிடியில்லை.

அதைவிட முக்கியம், விதானைமார் நேர்மையா காசுகுடுத்துத்தான் இப்பிடிச் சனத்திட்ட அரிசி வாங்கி, சைட் பிஸ்னஸ் செய்தவை. ஆனால் சமைக்கவே முடியாத அரிசியை மில்காரரிட்ட தெரிஞ்சே வாங்கின 'பெருங்கையள்', சனங்கள் முறைப்பாடு செய்தாலும் 'முறைப்பாடே வரேலை' எண்டு விசயத்தை அமத்தப் பாக்கினமாம். ஏனெண்டால், கைநீட்டி 'சுளையா' வாங்கிக் கொண்டுதான் இப்பிடி உதவாத அரிசியைக் குடுக்க ஓகே சொன்னவையாம். ஊரான் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே எண்ட கணக்கில அரசாங்கம் குடுக்கிற அரிசிதானே எண்டு இப்பிடி சில பெருச்சாளியள் விளையாட்டுக் காட்டியிருக்கினம். ஆனால் எல்லாம் ஒருநாள் வெளிச்சத்துக்கு வரத்தானே வேணும்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் வீழ்ந்தது மும்பை




**மும்பை, மே 4**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் மும்பையை அதன் சொந்த மைதானத்தில் வைத்து வீழ்த்தியது கொல்கத்தா. இந்தத் தோல்வியைத் தொடர்ந்து மும்பை அணி தொடரில் இருந்து வெளியேறுவது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது.**

முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணிக்கு ஆரம்ப வீரர்களான பில் ஷோல்ட் மற்றும் நரைன் இருவரும் ஏமாற்றினார்கள். 5 ஓட்டங்களுடன் பில் ஷோல்ட்டும் 8 ஓட்டங்களுடன் நரைனும் ஆட்டமிழக்க கொல்கத்தா அணி மிகப்பெரும் தடுமாற்றத்தைக் கண்டது. ரகுவன்சி 13, ஸ்ரேயஸ் 6, ரிங்கு சிங் 9 என அடுத்தடுத்து ஆட்டமிழக்க வெறும் 57 ஓட்டங்களில் பிரதானமான 5 வீரர்களையும் கொல்கத்தா இழந்தது. இம்பாக்ட் முறையில் களமிறக்கப்பட்ட மனீஸ் பாண்டே, வெங்கடேஸ் ஐயருடன் இணைந்து நல்லதொரு ஆட்டத்தை வழங்கினார். ஓட்டச் சராசரியில் தொய்வும் ஏற்படாமல் விக்கெட்டையும் கொடுக்காமல் இருவரும் மிகநேர்த்தியாக விளையாடினார்கள். அணி 140 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மனீஸ் பாண்டே. பின்னர் களமிறங்கிய ரசல் சிக்சருடன் இன்னிங்ஸை ஆரம்பித்தாலும், தவிர்க்கப்பட்டிருக்க வேண்டிய கவனயீனத்தால் அவர் ரண்அவுட் ஆனார். 70 ஓட்டங்களுடன் வெங்கடேஸும் வீழ்த்தப்பட 169 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்தது கொல்கத்தா.

பதிலுக்குக் களமிறங்கிய மும்பை அணியின் இன்னிங்ஸோ கொல்கத்தாவின் இன்னிங்ஸை விடவும் மோசமாக அமைந்தது. ஆரம்ப வீரர்களான இஷான் கிஷான் 13 ஓட்டங்களுடனும், ரோகித் சர்மா 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினார்கள். மும்பையின் மத்திய வரிசையும் கொல்கத்தாவின் பந்துவீச்சில் ஒன்றுமில்லாமல் போனது. திகல் வர்மா 4, வெதேரா 6, ஹார்திக் பாண்டியா 1 என அடுத்தடுத்துப் பவிலியன் திரும்ப 71 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்தது மும்பை. ஆட்டத்தை மாற்றுவதற்கு சூரியக்குமார் யாதவ் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டார். அவர் அரைச்சதம் கடந்தார். சூரியக்குமார் யாதவ் 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 145 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்தது மும்பை இந்தியன்ஸ். இதையடுத்து 24 ஓட்டங்களால் கொல்கத்தா அணி வெற்றிபெற்றது. (ம)

## ஆட்பதிவுத் திணைக்களம் இன்று திறக்கப்படும்!


கொழும்பு, மே 4

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மைகருதி கொழும்பு பத்தரமுல்லயில் உள்ள ஆட்பதிவுத் திணைக்களம் இன்று நண்பகல் ஒரு மணிவரை திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, மட்டக்களப்பு, குருநாகல் அலுவலகங்களும் இன்றையதினம் திறந்திருக்குமெனவும் இதுவரை தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் அதிபர், கிராமசேவகர் ஆகியோரின் சிபார்சுடன் சென்று அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ளலாம் எனவும் ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-6)

## மரண அறிவித்தல்

மலர்வு
04
.
09
.
1932



உதிர்வு
30
.
04
.
2024

### காசித்தம்பி பேரம்பலம்

*(முன்னாள் கிராமசேவை அலுவலர் - சாவகச்சேரி)*

மட்டுவில் வடக்கு சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, பெருங்குளம் சந்தியை வதிவிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய காசித்தம்பி பேரம்பலம் 30.04.2024 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற காசித்தம்பி - பசுபதி தம்பதியரின் மூத்தமகனும், செல்லையா - சின்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற நாகம்மாவின் கணவரும், சவுந்தரராஜன் (UK), சவுந்தரகுமார் (Canada), சவுந்தராதேவி (Canada), சவுந்தரநாதன் (Canada), ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், அருள்பரன், பாமினி, காலஞ்சென்ற சாந்தி, யோகேஸ்வரி ஆகியோரின் மாமனும், குமாரசாமி, நாகம்மா, சரஸ்வதி ஆகியோரின் சகோதரரும், பாக்கியம், ஞானசுந்தரம், சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், சுஜன், உமா, ஐங்கரன், டிலானி, செந்தூரன், அடலின், சித்திரா, அருணன், அபிராமி, நிருஷன், ஜனனி, அருண், ரேவதி ஆகியோரின் அன்புப் பேரனும், டிவினா, அக்ஷயா, அரியானா, அர்னவ், வேலன், ரியானா, ஈதன், கதிரவன் ஆகியோரின் பூட்டனும், அரசி, கண்ணன், சுபா ஆகியோரின் பெரியப்பாவும், மோகன், குகன், ரமணன், வத்சலா, சகிலா, செந்தூரன், அகிலன், அர்ச்சுனா, அட்சயன் ஆகியோரின் மாமனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.05.2024 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு**

சவுந்தரராஜன் (மகன்) +442089523543
சவுந்தரகுமார் (மகன்) +14169399324
சவுந்தராதேவி (மகள்) +14164181201
சவுந்தரநாதன் (மகன்) +14167216563

**தகவல்: பொ.சுப்பிரமணியம்**
**(மைத்துனர்)**
**பெரியாசடி வீதி**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

## மரண அறிவித்தல்



### கனகசபை செங்கமலர்

**மலர்வு : 04.01.1926** **உதிர்வு : 02.05.2024**

யாழ். உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கனகசபை செங்கமலர் அவர்கள் (02.05.2024) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னபூரணம் தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற சரவணமுத்து கனகசபை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நல்லையா, ஞானமலர் மற்றும் புஸ்பமலர்(பிரான்ஸ்), காலஞ்சென்ற குலசேகரம் மற்றும் புனிதமலர் (அவுஸ்திரேலியா), அருந்தவரட்ணம் (கொழும்பு), கிருஷ்ணானந்தன் (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆனந்தராணி(கனடா), காலஞ்சென்ற நித்தியானந்தராணி மற்றும் தில்லைநாயகி, ஆனந்தராசா (கனடா), யோகராணி, காலஞ்சென்ற சிவநாதன் (ஜேர்மனி) மற்றும் அருளானந்தம், லில்லிமாலா, சிவயோகம், தயானந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், செல்வரத்தினம், ஜெயசேனா மற்றும் மனோன்மணி(கனடா), ரத்தினேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான தம்பிராசா, வேலும்மயிலும் மற்றும் சகுந்தலாதேவி, அன்ரன் எனஸ்ட், விக்கினேஷ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், மயில்வாகனம், அனந்தீஷ்வரன் மற்றும் யோகேஷ்வரி, ராஜமலர், கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், மணிவண்ணன்(கனடா), ஜெயக்குமாரன், காலஞ்சென்ற ஜெயராஜ் மற்றும் சுகிர்தமதி, Dr. ரோகினி(கனடா), சுஜீவன்(கனடா), கஜீவன்(கனடா), வாணிசிறி, கீர்த்திகா, காலஞ்சென்ற கீர்த்தீபன் மற்றும் ஜெரால்டினி, திலக்சி, கஜந்தினா, ஹார்தீபன், சிவமோகன் (ஜேர்மனி), சிவகாமி(ஜேர்மனி), றஜீவ்காந், தாரணி, தர்மினி, பவன்ராஜ்குமார் (கனடா), நீலமேகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கிருஷான், தாரகன், கார்த்தி(கனடா), கவின்(கனடா), நஷ்வின், கஷ்மிதா, கனிங்கா, பிரவுசன், நயனிகா, சஸ்வின், சஸ்விகா, ராஜ்குமார், நவீன்ராம், யதுஷன், ஷாளினி, அஸ்வினா, அஷ்ரின், அஷ்மிதா, நிவிஷ்திகா, றெனுஷ்கா, றெனுஷன், சகானா, ஆரணி(கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (05.05.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, அதனைத்தொடர்ந்து உரும்பிராய் தெற்கு வேம்பன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**

**மணிவண்ணன் - பேரன் (கனடா) +17805045083**
**ஆனந்தராசா - மகன் (கனடா) +14168291537, 075 6451570**
**ஆனந்தராணி - மகள் (கனடா) +16477666624**
**சங்கர் - பேரன் (இலங்கை) +94771056291**
**அருந்தவரட்ணம் - சகோதரன் (இலங்கை) +94776022546**

(CS 385) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குழப்பங்களை விதைக்காதீர்

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவுசெய்யப் பட்டதன் பின்னர் அவருடன் நெருக்கமான உறவை வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப் பினருமான சி.வி.விக்னேஸ்வரன் பேணி வருகின்றார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒருவரே தமிழ்த் தரப்பிலிருந்து ரணிலை பகிரங்கமாக ஆதரித்தவர். அவருடன் விக்னேஸ்வரனும் இணைந்து ஆதரித்து வருகின்றார். இப்படிப்பட்ட விக்னேஸ் வரன், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்படவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப் பட்டபோது அதை ஆதரித்தார், அதற்கான சில முன்னெடுப்பு களையும் அவர் மேற்கொண்டவர். அவரின் இந்த நடவடிக் கைகள் தொடர்பில் சில சந்தேகங்களை 'உதயன்' தனது ஆசிரியர் தலையங்கத்தில் முன்னரும் சுட்டிக்காட்டியிருந்தது. தமிழ் பொதுவேட்பாளர் என்ற கருத்தியலை ஆதரிப்பவர் போன்று இருந்து அதைச் சிதைப்பதற்கே விக்னேஸ்வரன் முயற்சிக்கின்றார் என்ற சந்தேகம் இன்னமும் நீடிக்கவே செய்கின்றது. இந்த நிலையில், 'பலர் பொது வேட்பாளரை முன்னிறுத்தினால் தமக்கு வேண்டிய சிங்கள வேட்பாளருக்கு வாக்களிக்க முடியாமல் போய்விடும் என்று அஞ்சுகின்றார்கள். அது தவறு. பொதுவேட்பாளருக்கு நாம் எமது முதல் வாக்கை அளித்துவிட்டு 2ஆம், 3ஆம் விருப்பு வாக்குகளை நாம் விரும்பும் சிங்கள வேட்பாளருக்கு அளிக்கமுடியும். இதன்மூலம் தமிழ் மக்களின் ஒற்றுமை பேணப்படும், எமது எதிர்பார்ப்புகள் உலகறியச் செய்யப்படும், அதேநேரத்தில் எமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கும் இடமளிக்கப்படும். இவ்வாறு செய்வதால் இனக்கலவரங்கள் வெடிக்கவேண்டிய அவசியம் எதுவும் ஏற்படாது' என்று கிளிநொச்சியில் நடைபெற்ற தொழிலாளர் தினக் கூட்டத்தில் விக்னேஸ்வரன் உரையாற்றி யிருக்கிறார்.

தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதை எதிர்க்கும் சில தரப்புகள் முன்வைத்த சந்தேகத்தை உறுதிப்படுத்துவதைப் போன்று விக்னேஸ்வரனின் கருத்து அமைந்துள்ளது. தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துபவர்கள் தமது இரண்டாவது அல்லது மூன்றாவது தெரிவாக சிங்கள வேட்பாளரை ஆதரிப்பார்கள். எனவே தேர்தல் புறக்கணிப்புத்தான் சரியானது என்பது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு. அந்த நிலைப்பாடு சரியென்பதுபோலவும், தமிழ்ப் பொது வேட்பாளர், சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவாகவே இருப்பார் என்பதைப் போலவுமே விக்கினேஸ்வரனின் கருத்துகள் இருக்கின்றன.

ஆனால், தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் மிகக்கடுமையாக உழைக்கும் சிவில் சமூகத்தி னராக இருக்கலாம் அல்லது அரசியல் தரப்புக்களாக இருக்கலாம் அவர்கள் எவரிடமும் இப்படி தமிழ்ப் பொதுவேட்பாளர், சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவாகச் செயற்படுவது போன்ற யோசனைகளோ, திட்டங்களோ , எண்ணங்களோ இல்லை. இவ்வாறானதொரு நிலையில் விக்னேஸ்வரன் இப்படியொரு கருத்தை பொதுவெளியில் முன்வைத்ததன் மூலம் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற கருத்தியல் மீதும், பொதுவேட்பாளரை நிறுத்துவதற்காக உளமாரப் பாடுபடும் சிவில் அமைப்புகள் மத்தியிலும், மக்களிடையேயும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டிருக்கின்றார். சிலவேளைகளில் அவரது தனிப்பட்ட விருப்பாக இந்த யோசனை இருந்தால், அதைக்குறித்து அவர் இதுதொடர்பில் செயற்பாட்டில் இருக்கும் அமைப்புகளுக்குத் தெரியப்படுத்தி, அவர்களின் ஆலோசனை களைக் கேட்டிருக்கலாம். அதை விடுத்து இப்படிப் பகிரங்க மாக பொதுவேட்பாளர் என்ற கருத்தியல் மீது சந்தேகத்தை உண்டுபண்ணும் விதமாக பேசுவதென்பது ஆரோக்கியமான விடயமல்ல.

அரசியல்வாதிகள் தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தை தனித்துக் கையாள முயன்றால் நிலைமை இவ்வாறு சிக்கலுக் குரியதாகவே மாறும். சிவில் அமைப்புகள் உட்பட சகல தரப்பின் ஆலோசனையுடனுமே இவ்வாறான நிலைப்பாட்டை முன்வைக்கவேண்டும். ஏனெனில் தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரம் தொடர்பில் பல தடவைகள் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் பேசப்பட்டாலும், சில முயற்சிகள் முன்னரும் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், இம்முறையே அதை எல்லோரும் ஒன்றிணைந்து, எமது உரிமைக்குரலின் ஓர் அடையாளமாக நடைமுறைப்படுத்துவதற்கான சூழல் காணப்படுகின்றது. தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தை குழப்புவதற்கு பல்வேறு தரப்புகளும் நிச்சயம் பிரயத்தனத்தை மேற்கொள்ளவே செய்வார்கள். பொதுவேட்பாளர் விடயத்தால் பாதிக்கப்படப்போகும் சிங்களத் தரப்புகள் நிச்சயம் தங்கள் கைப்பொம்மைகள் ஊடாக இதைக் குழப்பியடித்து தோற்கடிக்கவே முயற்சிப்பார்கள். எனவே அரசியல்வாதிகள் கருத்துகளை முன்வைக்கும்போது அவதானம் தேவை. சிவில் சமூகத்தினரும் இதுதொடர்பில் பரந்தளவிலான மக்கள் அறிவூட்டலைச் செய்யும்போது, தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பான சந்தேகங்கள் தீரும். இதன்மூலம் குழப்பம் விளைவிக்கும் தரப்புகளின் நோக்கத்தை தோற்கடிக்கலாம்.




# வடக்கில் இப்போது சுபீட்சம் நிலவுகிறதாம்



## எரிக் சொல்ஹெய்ம் கூறுகிறார்

**கொழும்பு, மே 4**

**வடக்கில் தற்போது அமைதியான சூழல் நிலவுவதுடன் மக்கள் தற்போது சமாதானத்தை அனுபவிக்கின்றனர். இது மிகச்சிறந்த விடயமாகும். அங்குள்ள மக்கள் மீண்டும் போர் இடம் பெற்ற காலத்துக்கு திரும்பிச் செல்வதை விரும்பவில்லை.**

- இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு களப்பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகரும், முன்னாள் நோர்வே வெளிவிவகார அமைச்சருமான எரிக்சொல்ஹெய்ம் தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இருபது ஆண்டுகளின் பின்னர் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குச் சென்றுள்ளேன். இலங்கையில் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் பலமுறை நான் அங்கு சென்றிருந்தேன். தற்போது வட இலங்கை சமாதானத்தை அனுபவிப்பதுடன், அது மிகச்சிறந்த விடயமாகும். பாதுகாப்பு சிறந்த நிலையில் காணப்படுகிறது. தமிழர்களின் அபிலாஷைகள் இன்னமும் பூர்த்திசெய்யப் படவேண்டிய நிலையிலேயே உள்ளதை அவதானிக்கமுடிகிறது. வட இலங்கையில் வேலை வாய்ப்புகள் மற்றும் சுபீட்சம் என்பன உறுதிப் படுத்தப்படவேண்டும். இலங்கை அரசு அதிகாரங்களைப் பகிரவேண்டும்- என்றுள்ளார். (ச-இ)

# பொருள்கள் விலையில் மாற்றம் ஏன் இல்லை?



## சபாநாயகர் கேள்வி

கொழும்பு, மே 4

எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டாலும் உணவுப் பொருள்கள் உள்ளிட்ட ஏனைய பொருள்களின் விலைகள் குறையவில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெளிவுபடுத்த உள்ளேன்.

எரிபொருள், மின்சாரக் கட்டணம் மற்றும் எரிவாயு என்பனவற்றின் விலைகள் சிறிய தொகையில் அதிகரித்தாலும் ஏனைய பொருள்களின் விலை உயர்த்தப்படுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-இ)


# பாடசாலை மே 20 இல் ஆரம்பம்

கொழும்பு, மே 4

இந்த வருடத்தின் முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட விடுமுறை முடிவடைந்து எதிர்வரும் 20 ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகும் என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (ச-இ)

# சிரேஷ்ட சட்டவாதிகள் ஐவருக்கு கௌரவம்

வரலாற்றில் முதல்முறையாக ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவால் சிரேஷ்ட சட்டவாதிகள் ஐவருக்கு 'சிரேஷ்ட அறிவுறுத்தல் சட்டத்தரணி' அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. கலாநிதி ஜே.எம். சுவாமி நாதன், டி.எம். சுவாமிநாதன், ஜி.ஜி. அருள்பிரகாசம், எச்.ஆர்.ஏ.டி.பி. குணதிலக மற்றும் எஸ்.என்.எம். குணவர்த்தன ஆகியோருக்கே இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)



# கம்பஹாவில் எலிக்காய்ச்சல்

கொழும்பு, மே 4

கம்பஹாவின் பல்வேறு பிரதேசங்கள் எலிக் காய்ச்சல் பரவும் அபாயமிக்க இடங்களாக அடையாளம் காணப் பட்டுள்ளன. இவ் வருடத்தின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் மாத்திரம் 17 எலிக்காய்ச்சல் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் 2 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன எனவும் தெரிவிக்கப் படுகிறது. (ச-இ)

**நாளை**

05.05.2024
ஞாயிற்றுக்கிழமை
சித்திரை - 22
சுபநேரம் : 08.56 - 10.26
ராகுகாலம் : 04.26 - 05.56
பிரதோஷ விரதம்

**நாளொரு நல்வார்த்தை**

**வாழ்க்கை என்பது வாய்ப்புகளால் நிரம்பியது. நாம் பயன்படுத்தும் வாய்ப்பை பொறுத்தே நம் வாழ்க்கை அமையும்.**

-ஜோன் எப். கென்னடி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக்காணும் மருத்துவ ஆளுமை



■ வீரகத்தி தனபாலசிங்கம்

சிலரைப் பதவிகள் பெருமைப்படுத்துகின்றன. வேறு சிலர் பதவிகளைப் பெருமைப்படுத்துகிறார்கள். இதில் நிச்சயமாக இரண்டாவது வகையான ஆளுமையாகவே மருத்துவ கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் இருக்கின்றார். மிகவும் இளம் வயதில் இலங்கை சுகாதாரத் துறையில் பல உயர்பதவிகளை வகித்து அளப்பரிய சேவையைச் செய்துவரும் அவர், இன்று தனது 60ஆவது அகவையில் பிரவேசிக்கிறார்.

வடமராட்சியின் கரவெட்டி காலங்காலமாக பல்வேறு துறைகளிலும் தலைசிறந்த ஆளுமைகளைத் தோற்றுவித்த பாரம்பரியத்தைக் கொண்டமண். தமிழ் மண்ணில் முதன்முதலான கம்யூனிஸ்ட் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.கந்தையா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் எம்.சிவசிதம்பரம் தொடக்கம் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி என்று இந்த ஆளுமைகளின் பட்டியல் நீண்டு கொண்டேபோகும்.

அதை விவரிக்க இங்கும் இடம்போதாது. சோவியத் ரஷ்யாவில் தனது மருத்துவக் கல்வியைப் பெற்ற கேதீஸ்வரன் சமுதாய மருத்துவத்தில் முதுமாணிப் பட்டத்தை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பெறுக்கொண்டார். தனது 25ஆவது வயதில் கேதீஸ்வரன் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையின் பொறுப்பதிகாரியாக முதல் நியமனத்தைப் பெற்றார்.

அதற்குப் பிறகு வவுனியா பொது மருத்துவமனையின் மருத்துவ அதிகாரி, வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி, வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிகளை வகித்து, தற்போது யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகச் சேவையாற்றி வருகிறார்.

சுகாதாரச் சேவையில் இளவயதில் இருந்தே முக்கியமான பதவிகளை வகித்து வளமான அனுபவத்தைக் கொண்டிருக்கும் கேதீஸ்வரன் இன்று இலங்கையில் உள்ள முக்கியமான சுகாதார சேவை அதிகாரிகளில் ஒருவராக விளங்குகிறார். தனது நிர்வாகத்தின்கீழ் இருக்கும் பிராந்தியங்களின் சுகாதாரச் சேவைகளின் சிறப்புக்காக அரசாங்கத்தின் கௌரவத்தையும் அவர் பல தடவைகள் பெற்றிருக்கிறார்.

## அமைதியான ஆளுமை

கேதீஸ்வரனின் எளிமையும் நயநாகரிகமான அணுகுமுறையும் மக்களுடனான தொடர்பாடல்களில் அவரின் கண்ணியமான அணுகுமுறையுமே அவரை இன்றைய உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தன என்பதில் சந்தேகமில்லை. கேதீஸ்வரன் அதிர்ந்து பேசியதை எவரும் கண்டிருப்பார்கள் என்று நான் நம்பவில்லை. சுகாதாரசேவை அதிகாரிகளுக்கு மாத்திரமல்ல சகல துறைகளையும் சேர்ந்து இருக்கவேண்டிய சகல உயர் பண்புகளையும் உருவகப்படுத்தும் சிறந்த ஒரு ஆளுமையாக எம்மத்தியில் அவர் பிரகாசிக்கிறார்.

ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் கேதீஸ்வரன் செய்துவந்திருக்கும் அர்ப்பணிப்புச் சிந்தையுடனான சேவைகளை நான் அறிவேன். வவுனியாவில் அவர் பல வருடங்கள் சேவைசெய்து அந்தப் பிராந்திய மக்களினதும் பிரதிநிதிகளினதும் பெருமதிப்புக்குரியவராகத் திகழ்ந்த மாண்பை காலஞ்சென்ற மூத்த பத்திரிகையாளரான எனது நெருங்கிய நண்பர் வவுனியா பொன்னையா மாணிக்கவாசகம் என்னிடம் பல தடவைகள் கூறியிருக்கிறார். கேதீஸ்வரின் நிர்வாகத்தின்கீழ் அண்மைக்காலமாக யாழ்ப்பாணம் சுகாதார சேவையில் முன்னெடுக்கப்படுகின்ற மேம்பாட்டு நடவடிக்கைகள் அவருடைய நிர்வாகத் திறமைக்குச் சான்றுபகர்கின்றன.

கரவெட்டி ஆதார மருத்துவமனையை இன்று பல்வேறு வசதிகளையும் கொண்டதாக மேம்படுத்தியதில் கேதீஸ்வரன் செய்த பங்களிப்பு அவரின் அர்ப்பணிப்புச் சிந்தையுடனான சேவையை நாம் தெளிவாகத் தெரிந்துகொள்வதற்கு எமக்கு நெருக்கமாக முன்னாலுள்ள ஒரு சான்றாகும்.

கேதீஸ்வரனின் மணிவிழாவைக் கொண்டாடுவதற்கு கரவை மக்களும் புலம்பெயர்ந்த உறவுகளும் இன்று விமரிசையான விழாவொன்றை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இன்று காலை நெல்லியடி முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் முன்னாள் அதிபர் நடராஜா தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறும் விழாவில் மருத்துவத்துறை மற்றும் கல்வித்துறை உட்பட பல்வேறு துறைகளையும் சார்ந்த முக்கியமான பிரமுகர்கள் கலந்துகொண்டு கேதீஸ்வரனை சொந்த கரவை மக்கள் முன்னிலையில் கௌரவிக்கிறார்கள் என்பது அளவிலா மகிழ்ச்சியையும் பெருமையையும் தருகிறது.

அவரின் சேவைகளையும் சாதனைகளையும் விளக்கும் 'ஆற்றலாளன்' என்று மகுடத்திலான மணிவிழா மலர் ஒன்று இன்றைய விழாவில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

மணிவிழாவுக்கான விரிவான ஏற்பாடுகளைச் செய்வதில் பல வாரங்களாக முன்னின்று உழைத்த கரவை திருஇருதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் இளையதம்பி இராகவன் பெரும் பாராட்டுக்குரியவர். கேதீஸ்வரன் ஆரோக்கியத்துடன் நீடூழி வாழவும், மக்களுக்கான தனது மாண்புமிகு சேவையைத் தொடரவும் வாழ்த்துவதில் தமிழ்ச் சமூகம் பெருமையடைகின்றது. ■



வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தால் வெளியிடப்பட்ட 'நாராயணன் பஜனை பாமாலை' நூல் ஆலய மஹோற்சவத்தின்போது வெளி யிட்டு வைக்கப்பட்டது. நூலை கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன் வெளியிட்டு வைக்க ஆலய பரிபாலன சபையினர் பெற்றுக் கொண்டனர். (ச)

# பஸ் கட்டணத்தில் மாற்றம் இல்லை!

கொழும்பு, மே 4

எரிபொருளின் விலை குறைந்தாலும் பேருந்துக் கட்டணத்தில் திருத்தம் செய்யப்படமாட்டாது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. கடந்த 30 ஆம் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருளின் விலை குறைக்கப்பட்டது.

எனினும் கடந்த இரண்டு தடவை முன்னெடுக்கப்பட்ட எரிபொருள் விலையேற்றத்தின்போது, பஸ் கட்டண திருத்தம் செய்யப்படாததால், எதிர்வரும் ஜூலை மாதமே கட்டண திருத்தம் செய்யப்படும் என்றும் பஸ் சங்கங்கள் தெரிவித்துள்ளன. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். சங்கடங்கள் ஏற்படும். செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். எதிர்பாராத பணவரவு கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றி நிம்மதி பெறுவீர்கள். திடீர் ஆதாயம் கிடைக்கும். வீண் பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும். அனுகூலம் உண்டாகும். பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை. விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**கடகம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். பணிகளில் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். தட்சணாமூர்த்தியை வழிபட தடைகள் விலகும்.

**சிம்மம்:** காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். செலவுகள் ஏற்படும். பணவரவு கிடைக்கும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். மகிழ்ச்சி உண்டாகும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். ஆதாயம் பெறும் வாய்ப்புண்டு.

**கன்னி:** ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். உங்கள் முயற்சிக்கு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். செலவுகளால் கடன் வாங்க நேரிடும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படும். பணியாளர்களால் வீண் செலவுகள் ஏற்படும். மகாவிஷ்ணுவை வழிபட சிரமங்கள் நீங்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிறு சங்கடங்கள் ஏற்படலாம். பாதிப்பு இருக்காது.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பெருமை உண்டாகும். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடக்கவும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். செலவுகள் ஏற்படக்கூடும். வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையாக இருப்பது அவசியம்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். மகிழ்ச்சியும் உற்சாகமும் தருவதாக இருக்கும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி சாதகமாகும். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். விநாயகர் வழிபாடு நலம் சேர்க்கும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவது நல்ல . சங்கடங்கள் ஏற்படும். பணியாளர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மகிழ்ச்சி பெருகும். நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

# பாதயாத்திரை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 4

செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர் காமம் நோக்கிய பாதயாத்திரை நிகழ்வு, ஜெயாவேல் சாமி தலைமையில் எதிர் வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்ப மாகவுள்ளது.

இதில் கலந்துகொள்ளவுள்ள அடியார்கள் அனைவரும் மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு 0778386381 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு பாதயாத்திரைக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ப)

## வேலையாட்கள் தேவை

யாழில் உள்ள பிரபலமான வெதுப்பகம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் தேவை.
ஆண்கள் விரும்பத்தக்கது.
வேலை நேரம் - 5 am - 2 pm
- 1 pm - 9pm
No. 118, Rolex Bake Mart
Kasthuriyar Road, Jaffna.
(cs54876) (N-1)
021 222 9402, 077 713 1594

## அலுவலக உதவியாளர் தேவை

சாவகச்சேரியில் இயங்கிவரும் விநியோக நிறுவனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள பெண் உதவியாளர் தேவை.

- கணினி அறிவு கொண்டிருத்தல் அவசியம் (MS Office Package)
- தென்மராட்சியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது

(cs.54913) (N-1)
077 225 0149

# விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 4

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச முன்பள்ளியின் வருடாந்தச் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு, முன்பள்ளி முன்றலில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. கணேச சனசமூக நிலையத்தலைவர் சி.செல்வஸ்கந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வடமா காணசபை முன்னாள் உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள் ளார். (ப-66)

# வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே 4

பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவின் வாழ்க்கை வரலாறு மற்றும் பணிகள் அனைத்தை யும் உள்ளடக்கி, ஜீவநதி பதிப்பகம் வெளியிடும் 'எஸ்.சிவலிங்கராஜா' சிறப்பிதழ் வெளியீட்டு விழா, திருநெல் வேலியிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. மூத்த கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் த.அஜந்தகுமார், எழுத்தாளர்களான திருமதி கோகிலா மகேந்திரன், இ.இராஜேஷ்கண்ணன், அ.பௌநந்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-66)

# கருத்தரங்கும் கௌரவிப்பும்

வடக்கு - கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் மதுபோதைக்கு எதிரான இயக்கம் நடத்தும் விழிப்புணர்வு கருத்தரங்கும், செயற்பாட்டாளர் கௌரவிப்பு நிகழ்வும் து.சுகிர்தன் தலைமையில் யாழ். தந்தை செல்வா கலையரங்கத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்துகொள்ளவுள்ளார். பேச்சாளர்களாக யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத்தலைவர் திருமதி கோசலை மதன், சட்ட மருத்துவ அதிகாரி மருத்து வர் மயூரதன், பெண்கள் உரிமைச் செயற்பாட்டாளர் ரஜனி ராஜேஸ்வரி, ஹெல்திலங்கா நிறுவனத்தின் பிராந்திய நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர் தே.பிரேமராஜா, நாடாளுமன்ற உறுப்பி னரான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-159)

## Invitation for Bids (IFB)

## VAVUNIYA NORTH PRADESHIYA SABHA - NEDUNKERNY

1. The Chairman Local Authority Procurement Committee (LAPC), on behalf of Vavuniya North Pradeshiya Sabha, Nedunkerny invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S. N o | Contract No. | Name of the Contract | Estimatd Civil Cost (Rs. Mn) | ICTAD Grade Required | Required Bid Security | | Contract period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bond Amount (Rs.) | Validity Period | |
| 01 | PSDG/VN/VNPS/ W/01-2024 | Construction of MPCS Road, Nedunkerny South | 8.34 | C6/C7 Highway | 84,000.00 | 02.09.2024 | 84.0 Days |
| 02 | PSDG-MAIN/VN/VNPS /W/02-2024 | Renovation of Culverts and Pot Holes Patching at Veladi Road and Ayiladi Periyamadu Road | 2.58 | C7/C8 Highway | 26,000.00 | 02.09.2024 | 84.0 Days |

2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure. Since the total cost estimate of this procurement is below Rs.50Mn, Regional preference and **CIDA** grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016(ii)

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been required valid CIDA registration in **Highway Construction** for the Grade mentioned in the table above and possess valid business or company registration.

4. Interested bidders may obtain further information from **Secretary, Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny [Telephone No: 024 2053014 Fax No: 024 2053084 Email: vnpsnk@gmail.com]** and inspect the bidding documents at the address **Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny from 09.00 Hrs to 15.00 Hrs** on working days.

5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny** from **06.05.2024** until **19.05.2024** from **09.00 Hrs** to **15.00 Hrs** on working days Upon payment of a non-refundable fee of **Three Thousand Rupees (Rs.3,000.00) The method of payment will be by cash.**

6. Bids shall be delivered in duplicate to the address at **Secretary, Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny on or before 20th May 2024 and 10.30 Hrs.** Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

7. Bid shall be valid up to **05.08.2024.**

8. All bids shall be accompanied by a "Bid-Security, as mention in the table above. Bid Security shall be valid up to the date mentioned in the table above.

9. The pre-bid meeting will be held on 13.05.2024 at **10.30 Hrs at the Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny**

The address (es) referred to above is (are):

**Chairman**
**Local Authority Procurement Committee,**
**Vavuniya North Pradeshiya Sabha**
**Mullai Road, Nedunkerny.**

(cs42345) (N-1)

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 06.06.1955 இறப்பு 02.05.2024

எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி சி.அனுஷா**
அவர்களின் பாசமிகு தந்தையார்


**செல்லையா செல்வரத்தினம்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
ஊழியர் நலன்புரிச் சங்கம்
யாழ்ப்பாண பிராந்திய காரியாலயம்
தென்னை பயிர்ச்செய்கை சபை,
பளை - கிளிநொச்சி.

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 05 . 1925



இறப்பு 01 . 05 . 2024

## இராசரட்ணம் பவளம்மா

**(பவளம்)**

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரட்ணம் பவளம்மா (பவளம்) கடந்த 01.05.2024 புதன்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசிங்கன் - சின்னம்மா தம்பதியரின் அன்புப் புத்திரியும், காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இராசரட்ணத் தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆச்சியம்மா, சின்னம்மா, குஞ்சுப்பிள்ளை, நடராசா மற்றும் தேவியம்மா ஆகியோரின் சகோதரியும், கௌரிதேவி, பாக்கியநாதன் (லண்டன்), சந்திராதேவி (டென்மார்க்) ஆகியோ ரின் அன்புத் தாயாரும், லோகநாதன், சிவஞானவதி (லண்டன்), நாகரத்தினம் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்சன், தர்சிகா (லண்டன்), சங்கீதா (லண்டன்), சத்தியா (லண்டன்), விதுசன் (டென்மார்க்), ஆரணி (டென்மார்க்) ஆகியோரின் பேர்த்தியும், நவ்வியா, காசிக், மகிழினி, சேயோன், கஸ்மிகா, அஸ்விக், அக்சரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காடாகரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குப்பிளான் தெற்கு,**
**குப்பிளான்.**

தகவல்:
**குடும்பத்தினர்**
**077 116 7815**

(cs 54916) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



மலர்வு
02 . 06 . 1938

உதிர்வு
01 . 05 . 2024

### நற்குணராசா மனோன்மணி

முல்லைத்தீவு தண்ணீரூற்று மேற்கு, முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கு, கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட நற்குணராசா மனோன்மணி அவர்கள் கடந்த 01.05.2024 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு - நாகம்மா தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நற்குணராசாவின் அன்பு மனைவியும், வாசுகி (பிரான்ஸ்), தேவகி (பிரான்ஸ்), சாங்கர் (பிரான்ஸ்), சாந்தி (பிரான்ஸ்), முரளி (பிரான்ஸ்), றெஜீந்திரன் (லண்டன்), விபுலன் (ஆசிரியர், யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி), அகிலன் (யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), நவறஞ்ஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கைலயன்கிரிவாசன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (பிரான்ஸ்) மற்றும் சறோஜினிதேவி (பிரான்ஸ்), சிறிரவீந்திரன் (பிரான்ஸ்), தவச்செல்வி (பிரான்ஸ்), குமுதறஜனி (லண்டன்), பிரதீபா (விரிவுரையாளர் - புவியியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்), அருள்மதி (ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, கணபதிப்பிள்ளை மற்றும் செல்வராசா (ஸ்ரார் ஜீவல்லறி, புத்தளம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திரமலர், சற்குணதேவி, பராசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிந்துஜா, சாருஜா, ஜெனுசன், சுகிர்சன், அபிவருணன், அபிஷன், அனிஷன், அஷ்விந்தன், துஷிந்தா, சோபிகா நிருஷா, வேதிகா, அன்றியா, யொசுவா, வெர்ஜினி, றெமி, ஐஸ்வரியன், அம்ஷவி, அக்ஷிகா, அஷ்விதன், ரிஷிகா, ஆருஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஐலீன், அலிஷா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (05.05.2024) முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
077 495 2024, 071 861 7949

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 54924) S-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
15 . 11 . 1948

இறைவன் அடியில்
16 . 04 . 2023

### அமரர் நாகலிங்கம் ஆனந்தசிவம்

(சிவாஸ் மணிக்கூட்டு தொழிலகம்)

**திதி: சித்திரை மாத தேய்பிறை ஏகாதசி**
**(04.05.2024)**

ஓராண்டு கடந்து சென்றதையே
நம்ப மறுக்கும் எம் மனம்
நீங்கள் எங்களை பிரிந்து சென்றதை
எங்ஙனம் ஏற்றுக்கொள்ளும்?
என்றும் மாறிடாத புன்சிரிப்பும்
யார் மனமும் நோக நடந்திடா பண்பும்
நேர்த்தியான தூய உடையழகும்
நெற்றியை விட்டகலா விபூதி குங்குமமும்
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
எம் விழிகளில் எப்போதும் நிறைந்திருக்கும்.....

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs.54914) (N-1)

## மரண அறிவித்தல்



தோற்றம்
23 . 03 . 1942

மறைவு
03 . 05 . 2024

### விநாயகமூர்த்தி பராசக்தி

கொக்குவில் மேற்கு, சிவகுருலேனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி பராசக்தி அவர்கள் நேற்று (03.05.2024) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற கந்தையா - மனோன்மணி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும், ஞானாம்பிகை, காலஞ்சென்ற கலைவாணி மற்றும் ஞானசூரியன் (லண்டன்), ஞானசம்பந்தன் (சுவிஸ்), ஞானசொரூபன், காலஞ்சென்ற ஞானேஸ்வரன் மற்றும் ஞானகுமார் (சுவிஸ்), ஞானேந்திரன் (உரிமையாளர், யாழ்ரன் மல்ரி சென்ரர்), ஞானகலை (கனடா), ஞானேஸ்வரி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகராஜா, விமலாதேவி, ருசானி, சிவரேகா, ஜெயறமணி, துரைசிங்கம், பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிசானி, சமந்தா, நிலானி, றக்ஷன், நிக்ஷன், மினோஜா, மகனிஹா, விதுஷன், லஷ்மி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ்சென்ற S.R.அன்னலிங்கம் மற்றும் தவமணி காலஞ்சென்றவர்களான S.R.மகாலிங்கம், மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 00399) S-1

## மரண அறிவித்தல்



தோற்றம்
14 . 09 . 1932

மறைவு
28 . 04 . 2024

### கனகசபாபதி கனகேந்திரன் (ஈழவேந்தன்)

(ஓய்வுநிலை மத்திய வங்கி அதிகாரியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி கனகேந்திரன் (ஈழவேந்தன்) கடந்த 28.04.2024 இல் கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - சிவயோகம் தம்பதியரின் மூத்த மகனும், மண்டைதீவு முன்னாள் சேர்மன் கைலாசபிள்ளை - நல்லநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், அருளாம்பிகையின் அன்புக் கணவரும், யாழினி, எழிலினி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேந்திரா, சம்பத்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான யோகேந்திரா, இந்திராணி மற்றும் பாலேந்திரா, விஜேந்திரராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, புனிதவதி, மகேஸ்வரிதேவி மற்றும் கணேஷமூர்த்தி (கணேஷ்), விக்னேஸ்வரன் (விக்னா - ஓய்வுநிலை இலங்கை வங்கி அதிகாரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நேசஜீவனின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நாளை (05.05.2024) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். மேலும் இதே நாளில் இவரது மகளின் வீட்டில் - இல.60, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறையில் காலை 9.00 மணியளவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.83, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மைத்துனர்கள்
077 637 5636

(CS54910) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
16 . 04 . 1972



மறைவு
06 . 04 . 2024

கடந்த 06.04.2024 சனிக்கிழமை இறைபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

# மகேஸ்வரன் மதீசன்

உரிமையாளர் - (Mahanathy Tex- Jaffna, Sankamam Tex - Jaffna, Jaffna Electricals Showroom - Jaffna, Malabar Electricals - Jaffna, ABEEE (Pvt) Ltd - Colombo, Colour Pluz - Jaffna, Jay Jay Colours - India)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.05.2024) சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் இந்தியாவில் இராமேஸ்வர அக்னி தீர்த்தக்கரையில் நடைபெற்று, அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (06.05.2024) திங்கட்கிழமை திருச்சியில் (இந்தியா) உள்ள அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும் மற்றும் முகநூல், மின்னஞ்சல் ஆகியவை மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறி அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல வழிகளிலும் உதவிகள் செய்த அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருச்சி, இந்தியா,

பிரிவால்துயருறும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பட்டினிச்சாவில் சூடானியர்கள்

சூடானில் உள்நாட்டுப் போர் காரணமாக பல்லாயிரம் அப்பாவிப் பொதுமக்கள் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளனர் என்றும், அவர்களுக்கு உடனடி உதவிகள் தேவைப்படுகின்றன என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் சூடான் இராணுவத்துக்கும் துணை இராணுவப் படைக்கும் இடையே உள்நாட்டுப் போர் வெடித்தது. தற்போதுவரை இந்தப் போர் தீவிரம் பெற்றுள்ளது. இதனால், விவசாய நடவடிக்கைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இயல்பாகவே வறுமை மிகுந்த தேசமான சூடான் இந்தப் போரின் விளைவால் மேலும் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளது.

சூடானில் தற்போது சுமார் 49 மில்லியன் மக்கள் வசித்து வருகின்றனர். இதில் 18 மில்லியன் மக்கள் உணவுத் தட்டுப்பாடு காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 7 லட்சம் மக்கள் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சூடானுக்கு வரும் சர்வதேச உதவிகள் பட்டினியால் வாடும் பகுதிகளில் உள்ள மக்களைச் சென்றடைவதை இராணுவம் தடுத்து வருகிறது என்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (ம)

# குருதிக் கொடை

புத்தூர், மே 4

வளர்மதி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், புத்தூர் வளர்மதி சன சமூக நிலைய மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. 2 மணி வரை குருதிக்கொடை முகாம் நடைபெறவுள்ளது. (ப-66)

# கொவிஷீல்ட் தடுப்பூசியால் பக்க விளைவுகள்!

## தயாரித்த நிறுவனம் ஏற்பு

வொஷிங்டன், மே 4

கொரோனாத் தடுப்பூசியான கொவிஷீல்ட் தடுப்பூசியால் பக்க விளைவுகள் ஏற்படலாம் என அந்த ஊசியைத் தயாரித்த நிறுவனம் லண்டன் நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளது.

உலகையே உலுக்கிய கொரோனாத் தொற்று காரணமாக தடுப்பு மருந்து கட்டாயமாக்கப்பட்டது. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துடன் இணைந்து அஸ்ராஜெனகா நிறுவனம் கொவிஷீல்ட் தடுப்பூசியை தயாரித்தது. இந்தத் தடுப்பூசியை 90 சதவீத மக்கள் போட்டுக் கொண்டனர். இந்த நிலையில் கொவிஷீல்ட் காரணமாக பலர் உடல்நலம் பாதிக்கப்படுவதாக லண்டன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கின் விசாரணையில் கொவிஷீல்ட் தடுப்பூசி ஒரு சிலருக்கு குருதியில் உறைதலை ஏற்படுத்தலாம். இது எல்லோருக்கும் வருவதில்லை என்று தயாரிப்பு நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது. (ச-இ)

# சிறைக்குள் இருந்து பரப்புரைக்குத் தடை

## கெஜ்ரிவாலின் மனு தள்ளுபடி


புதுடில்லி, மே 4

சிறைக்குள் இருந்தவாறு தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடமுடியாது என்றும், அது கேலிக்கூத்தானது என்றும் டில்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுபானக் கொள்கை ஊழல் வழக்கில் டில்லி முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவால் கடந்த மார்ச் மாதம் அமுலாக்கத் துறையால் கைதுசெய்யப்பட்டு திஹார் சிறையில் அடைக்கப்பட்டார்.

தற்போது மக்களவைத் தேர்தல் நடைபெற்று வருகிற நிலையில், சிறையில் இருக்கும் அவர் காணொலி வாயிலாக தேர்தல் பரப்புரையில் ஈடுபட வழிவகை செய்யவேண்டும் என்று டில்லி உயர் நீதி மன்றத்தில் சில தினங்களுக்கு முன்பு வழக்குத் தொடரப்பட்டது.

இந்த நிலையிலேயே, சிறைக்குள் இருந்தவாறு தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட முடியாது என்று டில்லி உயர் நீதி மன்றம் தெரிவித்துள்ளது. (ம)



# எரிமலை உச்சவெடிப்பு: இந்தோனேசியா முடக்கம்


யகார்த்தா, மே 4

இந்தோனேசியாவின் ஆபத்தான எரிமலைகளில் ஒன்றாக அறியப்படும், சுலேவேசி மாகாணத்தில் உள்ள எரிமலை வெடிக்கத் தொடங்கியதன் விளைவாக அந்த நாட்டின் ஏழு விமான நிலையங்கள் மூடப்பட்டுள் ளன.

இந்தோனேசியாவின் சுலவேசி மாகாணத்தில் உள்ள ருயாங் தீவில் உள்ள எரிமலை ஒன்று கடந்த மாதம் கரும்பு கையைக் கக்கியபடி வெடித்துச் சிதறத் தொடங்கியது. தற்போது அந்த எரிமலை உச்ச [illegible] தா க [illegible] (ம)


# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 06 . 1938



மறைவு 03 . 05 . 2024

## சண்முகலிங்கம் மகேஸ்வரிப்பிள்ளை (இராசமணி)

கச்சாய் வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், அல்லாரையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் மகேஸ்வரிப்பிள்ளை (இராசமணி) அவர்கள் நேற்று (03.05.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமர் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகசபை - கற்பகப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகலிங்கம் (காசாளர், பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், கொடிகாமம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், தங்கம்மா, இராசம்மா மற்றும் இராசையா, நல்லம்மா, யோகராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராகுலன் (கனடா), அகிலன் (கனடா), காலஞ்சென்ற அரவிந்தன் (லண்டன்) மற்றும் சண்சுதர்ஷன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நந்தினி (கனடா), ஆனந்தி (கனடா), சசி (லண்டன்), வாணி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், துவாரகன், நிரூஜன், பிரவீன், பிரியங்கா, வார்சிகன், யதுர்ஷிகன், கபிஷன், அனுஷன், சந்தியா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக எறியால் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

அல்லாரை வடக்கு,
மீசாலை.

இராகுலன் (0016475699036)
அகிலன் (074 121 3109)
சண்சுதர்ஷன் (0061405101932)

(CR 42354) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தம் உடன் தேவை!

## அமெ. அமைச்சர் பிளிங்கன் ஏழாவது முறையாக வலியுறுத்து

டெல்அவிவ், மே 4

**காஸாவில் உடனடியாக போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படவேண்டும் என்று அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் அன்ரனி பிளிங்கன் வலியுறுத்தியுள்ளார்.**

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்புக்கும் இடையிலான போர் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதுவரை 7 தடவைகள் பிளிங்கன் இஸ்ரேலுக்குச் சென்றுள்ளார். தற்போது மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவர், நேற்றுமுன்தினமும் இஸ்ரேலுக்குச் சென்றுள்ளார். இதன்போதே அவர் காஸாவில் போர்நிறுத்தத்தின் அவசியத்தை மீளவும் வலியுறுத்தியுள்ளார்.

ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இரு தரப்பும் போர் நிறுத்தத்துக்குச் செல்லவேண்டும். இந்தப் போர் நிறுத்தம் பணயக் கைதிகளை விடுவிப்பதற்கும் வழிவகுக்கும். பணயக்கைதிகளை விடுவித்து, போர்நிறுத்தம் கொண்டு வந்து, அதை இப்போது நடைமுறைப்படுத்துவதில் உறுதியாக உள்ளோம். பரிந்துரை மேசையில் உள்ளது. தாமதமில்லாமல் இரு தரப்பும் போர் நிறுத்தத்துக்குச் சம்மதம் தெரிவிக்கவேண்டும் என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்ரனி பிளிங்கன் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# பலஸ்தீன ஊடகவியலாளர்களுக்கு ஊடக சுதந்திர விருது அறிவிப்பு!

காஸா, மே 4

2024ஆம் ஆண்டுக்கான ஊடக சுதந்திரத்துக்கான விருது பலஸ்தீனப் பத்திரிகையாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. காஸா மோதல் குறித்த செய்திகளை அறிக்கையிடுவதில் பலஸ்தீன பத்திரிகையாளர்கள் வெளிப்படுத்திவரும் துணிச்சல் மற்றும் அர்ப்பணிப்புக்காக இந்த விருது அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதாக 'யுனெஸ்கோ' அமைப்புத் தெரிவித்துள்ளது. 'பெரும் ஆபத்து காணப்படுகின்ற போதிலும் தொடர்ந்து செய்தியறிக்கையிடலில் ஈடுபட்டுள்ள பலஸ்தீன பத்திரிகையாளர்களுக்கு ஆதரவையும் அங்கீகாரத்தையும் வழங்குவதற்காகவே இந்த விருது அவர்களுக்கு வழங்கப்படுகின்றது' என விருதுக்கான தெரிவுக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். கடினமானதும் ஆபத்தானதுமான சூழ்நிலைகளின் மத்தியில் பலஸ்தீன பத்திரிகையாளர்கள் வெளிப்படுத்தும் துணிவை 'யுனெஸ்கோ' வின் பணிப்பாளர் நாயகம் ஆட்ரி அசோலேயும் பாராட்டியுள்ளார். (ம)

# ஏவுகணை அமைப்பு வெற்றிகரச் சோதனை

புதுடில்லி, மே 4

டார்பிடோ எனும் ஏவுகணை அமைப்பை இந்திய இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் நேற்று வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது. இந்திய இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் இந்தியப் படையினருக்குத் தேவையான ஏவுகணைகளை தயாரித்து வருகின்றது. இந்த நிலையிலேயே டார்பிடோ என்கிற ஏவுகணை அமைப்பை இந்திய இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் நேற்று வெற்றிகரமாகப் பரிசோதித்தது. (ம)

## படுமோசமான...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் நோர்வேத் தூதுவர் மற்றும் நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் ஆகியோருக்கும் இடையில் நேற்று வெள்ளிக்கிழமை விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியைக் கடுமையாக விமர்சித்துள்ளார் சஜித்.

தற்போதைய ஆட்சி படுமோசமான ஆட்சி. இந்த ஆட்சியை ஐக்கிய மக்கள் சக்தி முடிவுக்குக்கொண்டுவந்து, மக்கள் சார் அரசாங்கத்தை அமைக்கும். அந்த அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் நாட்டை வழமை நிலைக்குக் கொண்டுவர ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நோர்வேத் தூதுவரிடம் தெரிவித்தார். இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பில் இரு தரப்பினரும் நீண்ட நேரம் கலந்துரையாடியதுடன், இலங்கை தற்போது எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகுறித்தும் ஆராயப்பட்டது. (அ-ம)

## ராஜபக்ச...

ரணவக்க இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மே தின கூட்டத்தில் எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளோம் என்று பொதுஜன பெரமுனவினரும், ராஜபக்சக்களும் குறிப்பிடுவது நகைப்புக்குரியது. 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் மக்கள் போராட்டம் பலம் பெற்றதையும், ராஜபக்சக்கள் பதவிகளை விட்டுத் தப்பிச் சென்றதையும் மறந்துவிட்டார்கள். பொருளாதாரப் படுகொலையாளிகள் என்று உயர்நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட ராஜபக்சக்களை முன்னிலைப்படுத்தியுள்ள பொதுஜன பெரமுனவுக்கு அரசியல் எதிர்காலம் என்பதொன்று கிடையாது. இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல்களில் ராஜபக்சக்களுக்கும் பெரமுனவினருக்கும் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள். இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தீர்மானமிக்கது. பொதுஜன பெரமுனவின் சார்பில் தேர்தலில் போட்டியிட எவரும் இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை முன்னிலைப்படுத்திக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் செல்வாக்குப் பெறலாம் என்ற நிலைப்பாட்டிலேயே ராஜபக்சக்கள் செயற்படுகின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது நாட்டு மக்களுக்கு நன்மதிப்பு உள்ளது. ஆதலால், ராஜபக்சக்களுடன் கூட்டணியமைத்து மக்களின் வெறுப்பை ஜனாதிபதி பெற்றுக்கொள்ளக் கூடாது - என்றார். (அ-ம)

## ஜே.வி.பி....

நடாத்திவருகின்றனர் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றின் பொருளாதாரக் கொள்கை ஒருமித்துக் காணப்படுவதாலேயே அந்தக் கட்சிகளுடன் இணையாமல், மக்களின் ஆதரவு அலை உள்ள ஜே.வி.பி.யின் பக்கம் செல்வதற்கு அவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர். இருவர் ரொஷான் ரணசிங்க அணியில் உள்ளனர். தற்போது டலஸ் அழகப்பெரும, சரித ஹேரத் மற்றும் சன்ன ஜயசுமன ஆகியோரே எஞ்சியுள்ளனர். இவர்களில் இருவருமே தற்போது ஜே.வி.பி.யின் பக்கமாக சாய்வதற்கு முற்படுகின்றனர். எனினும், இது தொடர்பில் இன்னும் அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகவில்லை. (அ-ம-44)

## சிறைத்தண்டனை...

விடுதலை செய்யப்பட்டனர். கடந்த பெப்ரவரி மாதத்தின் இரு வேறு தினங்களில் கைது செய்யப்பட்டிருந்த குறித்த மீனவர்கள் விசைப் படகோட்டிகள் எனத் தெரிவிக்கப்பட்டு ஆறு மாதகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடைச்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்குத் தொடர்பாக இந்திய அரசினால் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. மூவரும் விசைப் படகோட்டிகள் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்பதால் நல்லிணக்க அடிப்படையில் குறித்த மூவருக்குமான ஆறுமாதகால சிறைத் தண்டனையை இரத்துச் செய்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் கடந்த வாரம் உத்தரவிட்டிருந்தது. இதன்பிரகாரம் மூன்று இந்திய மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட கட்டளையும் வாசிக்கப்பட்டது. இதனையடுத்து மூவரையும் விடுதலை செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவிட்டார். (அ-ம-66)

## இறுதிப்போர்...

'உண்மையான யுத்தம்' எனும் தலைப்பின் கீழேயே அவரின் புத்தகம் வெளிவரவுள்ளது என சிங்கள இணைய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக இந்தப் புத்தகத்தை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாகவும் கூறப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராகச் செயற்பட்டாலும் அந்தக் கட்சியால் பொன்சேகா ஓரங்கட்டப்பட்டுள்ளார். எனவே, இந்தப் புத்தகம் வெளியான பின்னர் தீர்க்கமானதொரு அரசியல் முடிவை பொன்சேகா எடுப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ம-44)

## இலங்கையருக்கு...

ரமழானை முன்னிட்டு ஐக்கிய அரபு இராச்சிய அரசாங்கத்தால் இந்தப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை அபுதாபியிலுள்ள இலங்கைத் தூதரகமும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சும் இணைந்து மேற்கொண்டுள்ளன. (அ-ம-6)

## இருவர்...

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களைத் தடுக்கும் நோக்கில் நேற்றிரவு முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையின் போதே மேற்படி நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளும் நகர்வுகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-110)

## களமிறங்குவதை...

"ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முடிவெடுக்க கட்சிக் கூட்டமொன்று நடத்தப்படும்" - என்றார்.

சுதந்திரக்கட்சியின் பதில் தலைவராக மைத்திரி தரப்பில் விஜயதாஸ ராஜபக்ச நியமிக்கப்பட்டிருந்தாலும் அவர் அந்தப் பதவியை வகிப்பதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## பல்கலை...

நாட்டில் தனியார் மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவதற்கும், தேசிய வணிக முகாமைத்துவ நிறுவக மருத்துவ பீடங்களை நிறுவுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து மருத்துவ பீட மாணவர்களால் இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மாணவர்களின் போராட்டம் தீவிரமாகிச் சென்றதையடுத்து, மாணவர்களைக் கலைப்பதற்காக பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதையடுத்து மாணவர்களும் பொலிஸாருடன் ஏட்டிக்குப் போட்டியாக முரண்பட்டதையடுத்து பதற்றநிலை ஏற்பட்டது. மேலதிக பொலிஸார் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூஸ் (Juice) உற்பத்தியாளர்களுக்கு

சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட யூஸ் (Juice) நிரப்பும் இயந்திரம்.
மணித்தியாலத்திற்கு 4000 கப் நிரப்பி மூடி ஒட்டக்கூடியதும், திகதி குறியீடு செய்யக்கூடியதுமானது. அத்துடன் யூஸ் (Juice) கலக்கக்கூடிய கலவை இயந்திரமும் இப்பொழுது எம்மிடம்.





"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

**ஆர்க் .என். கம்பனி**

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917

# மைத்திரியிடம் மீண்டும் பதிவானது வாக்குமூலம்

கொழும்பு, மே 4

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வுத் திணைக்களத் தில் 2 மணி நேர வாக்குமூலம் ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பிலேயே அவரிடம் இந்த வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்களால் மேலதிக தகவல்கள் வெளியிடப்படவில்லை. (ம)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் உள்ள பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- சமையல் உதவியாளர்
- துப்புரவு பணியாளர் (Room Cleaners)
- Eiectrician
- சமையலாளர்
- உணவு பரிமாறுபவர்
- பாத்திரம் கழுவும் பணியாளர்

40 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. **ஆண், பெண்** இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

(CS/54838) J-1

தொடர்பு:- 076 012 0283

## விற்பனையாளர் தேவை

யாழ்நகரில் இயங்கிவரும் இலத்திரனியல் நிறுவனம் ஒன்றிற்கு ஆண் விற்பனையாளர் தேவை. வயதெல்லை : 22 -35

076 324 1761

## வீட்டின் இடிபாடுகள் விற்பனைக்கு

கந்தரோடை "ஸ்கந்தா" பாடசாலைக்கு அருகாமையில் ஒரு பழைய வீடு முற்றாக இடித்து அப்புறப்படுத்தப்படவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(CS 54908) S-1

077 391 3859,077 729 9212

# அக்னிக் காலம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 4


அக்னி நட்சத்திரம் அல்லது அக்னி நாள் காலப் பகுதி இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 28ஆம் திகதி வரை நீடிக்கவுள்ளது.

சித்திரை மாதம், பரணி 4ஆம் பாதத்தில் தொடங்கி ரோகிணி முதல் பாதம் வரை சூரியன் சஞ்சரிக்கும் காலத்தை அக்னி நட்சத்திரக் காலம் என்று பஞ் சாங்கம் கூறுகிறது. அக்னி நட்சத்திரத்தை முன் ஏழு, பின் ஏழு என 2 பிரிவாகப் பிரித்து ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது.

கோடை காலத்தில் வெயில் மிகக் கடுமையாக இருக்கும் காலப் பகுதியாக கருதப்படும் இந்தக் காலப் பகுதியைக் கத்தரி வெயில் என்றும் அழைப்பர். (ம-66)

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 05 . 1938



மறைவு 01 . 05 . 2024

### செல்லையா கந்தையா

(ஓய்வுபெற்ற பதிவாளர், சமாதான நீதவான்)

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் கைதடி மற்றும் சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கந்தையா (ஓய்வுபெற்ற பதிவாளர்) கடந்த 01.05.2024 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தியாகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் (கைதடி நாவற்குழி) அன்புக் கணவரும், கேதாரகௌரி (லண்டன்), ஜீவகௌரி (சுவிஸ்), சுதாகரன் (அவுஸ்திரேலியா), வரதன் (அவுஸ்திரேலியா), பிரபாகரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான காசிநாதர் தங்கரத்தினம், நிச்சிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வராசா மகேஸ்வரி (கைதடி நாவற்குழி), பொன்னம்பலம் நாகநாதன் (சிங்கப்பூர்) ஆகியோரின் மைத்துனரும், சிவகுமாரன் (லண்டன்), தேவநாயகம் (சுவிஸ்), குகப்பிரியா (அவுஸ்திரேலியா), நித்தியா (அவுஸ்திரேலியா), பிருந்தாஜினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷா, மதுஷா, தேன்நிலா, இளநிலா, சியானி, தருண், துஷாந், கிரிஷாந், வினுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிறுப்பிட்டி மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (05.05.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி குடும்ப இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மனோன்மணி அம்மன் வீதி,**
(BOC **அருகாமையில்)**
**சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி.**

தகவல்:
**குடும்பத்தினர்**
மனைவி - க.பரமேஸ்வரி
076 213 6636

(CS54917) N-1

## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் நொதேன் வைத்தியசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள **இரண்டு பரப்பு (2) காணி விற்பனைக்கு உண்டு.** தரகர் தேவை இல்லை.

(CS/54850) J-1

077 703 6914, 071 847 4755

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சத்திலிருந்து 20 இலட்சம் வரை
- தரகர் தேவையில்லை.

(CS/375) J-1

தொடர்பு :- 077 886 2927

## காணி விற்பனைக்கு உண்டு

நல்லூர் பின் வீதி, (கோவில் வீதி) துர்க்கா மணி மண்டபத்தின் அருகில் செல்லும் பாதையூடாக அமைந்துள்ள **4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**
மேலும் மூத்ததம்பி மடம் அருகிலுள்ள பாதையினூடாகவும் செல்லமுடியும்.

(CS 54880) J-1

077 229 4985, 077 621 2039

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் (புத்தகசாலைக்கு) மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (**Hardware**)ஆகிய நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
077 494 9683, 077 077 6469

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் மாநகர சபை எல்லைக்குள் கட்டட வேலை செய்பவர்கள் (**Labourers**) தங்கி நிற்பதற்கு 2 மாதங்களுக்கு வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:
077 959 2628

## வாடகைக்கு வீடு தேவை

இருவர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றிற்கு கொக்குவில், தாவடி, மானிப்பாய் பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:
077 530 6696

## பெண் வேலையாட்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாட்கள் தேவை.

| | |
|---|---|
| வயது | : 18 லிருந்து 30 வரை |
| வேலை நேரம் | : காலை 8.00 லிருந்து 5.30 வரை |
| மாத வேதனம் | : 25000/= லிருந்து 30000/= வரை |

(CS 54923) V-1

தொடர்புகளுக்கு:
077 728 5768

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (**Show Money**) வசதிகள்

தொடர்புகளுக்கு:
074 173 7684

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.